உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...



. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936



வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!



www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 22.05.2026 • மலர் 04 • இதழ்: 142 • Edition : Nagercoil • 22.05.2026 • Vol : 04 • Issue : 142 • Page : 4 • Rs. 5/-


# 5 நாடுகள் சுற்றுப்பயணம் முடிவு

## தாயகம் திரும்பினார் பிரதமர் மோடி



புதுடெல்லி, மே. 22

பிரதமர் மோடி அரசு முறை பயணமாக ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே மற்றும் இத்தாலி ஆகிய 5 நாடுகளுக்கு சென்றார்.

இந்த சுற்றுப்பயணம் மூலம், சர்வதேச வர்த்தகம், எரிசக்தி, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மேலும் வலுப்பெற்றுள்ளது. இந்த நிலையில், ஐந்து நாடுகளுக்கு சென்ற பிரதமர் மோடி, பயணத்தை முடித்துக் கொண்டு டெல்லி வந்தடைந்தார். அப்போது அவருக்கு மத்திய மந்திரிகள் மற்றும் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

ஐக்கிய அரபு அமீரகத்தில், பெட்ரோலிய இருப்புக்கள், நீண்ட கால எல்பிஜி விநியோகம், பாதுகாப்பு மற்றும் கப்பல் போக்குவரத்து ஆகியவற்றை உள்ளடக்கிய தொடர்ச்சியான முக்கிய ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டது. மேலும், இந்தியாவில் 5 பில்லியன் அமெரிக்க டாலர்களை முதலீடு செய்வதாக அபுதாபி உறுதியளித்துள்ளது. நெதர்லாந்து பயணத்தின்போது, பாதுகாப்பு, முக்கிய கனிமங்கள் மற்றும் பிற முக்கியத்துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக 17 ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டது.

முன்னதாக இந்த பயணத்தில், பிரதமர் நரேந்திர மோடிக்கு ஸ்வீடன் நாட்டின் உயரிய விருதான 'ராயல் ஆர்டர் ஆப் போலார் ஸ்டார்' விருதை வழங்கி கவுரவித்தார் அந்நாட்டின் இளவரசிவிக்டோரியா. அதனை தொடர்ந்து பிரதமர் மோடி, ஸ்வீடனின் இளவரசி விக்டோரியாவுக்கு, ஒரு கோண்ட் ஓவியத்தை வழங்கினார். கோண்ட் ஓவியம் என்பது, இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் உள்ள மிகப்பெரிய பழங்குடி சமூகங்களில் ஒன்றான கோண்டி மக்களால் பயிலப்படும் ஒரு துடிப்பான பழங்குடிக் கலை வடிவமாகும்.

இத்தாலி பயணத்தின்போது, அந்நாட்டு பிரதமரை சந்திக்க சென்ற பிரதமர் மோடி, அவருக்கு இந்தியாவில் இருந்து சாக் லெட் பாக்கெட் ஒன்றை வாங்கி சென்றார். அதன் பெயர் 'மெலோடி' என்பது இரு நாட்டினரிடையே கவனம் பெற்றுள்ளது.

இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனியும், பிரதமர் மோடியும் நெருங்கிய நட்பு கொண்டவர்கள் ஆவர். இதை அவர்கள் பல முறை தங்கள் சந்திப்புகளின்போது நிரூபித்து இருக்கின்றனர். இதை தற்போதைய சந்திப்பிலும் வெளிப்படுத்தினர்.

மோடி மற்றும் மெலானி என்ற பெயர்களின் கலவையாக அமைந்துள்ள 'மெலோடி' என்ற பெயர் உலகம் முழுவதும் சமூக வலைத்தளவாசிகளையும் ஈர்த்துள்ளது.

பிரதமர் மோடி தனக்கு அளித்த பரிசுடன்மெலோனிவீடியோ எடுத்து தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். அதில், 'பிரதமர் மோடி எனக்கு ஒரு பரிசாக, ஒரு மிக மிக சிறந்த சாக்லெட்டை கொண்டு வந்துள் ளார். அது 'மெலோடி' என மெலோனி கூறினார். வேடிக்கையாக அவர் கூறியதை கேட்டதும் பிரதமர் மோடியும் சிரித்து விட்டார். 'மெலோடி' என்ற ஹேஷ்டாக் மூலம் அவர் வெளியிட்ட இந்த வீடியோ பதிவு பெரும் வைரலாக பரவியது.

## சென்னையில் திடீர் மின் தடை ஏற்பட்டது ஏன்? அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம்



சென்னை, மே. 22

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக பகல் மற்றும் இரவு நேரங்களில் ஏற்படும் அறிவிக்கப்படாத மின்வெட்டால் மக்கள் கடுமையாக அவதி அடைந்துள்ளனர்.

இது குறித்து மின்வாரிய அலுவலகத்திற்கு போன் செய்தால் அதிகாரிகள் போனை எடுக்கவில்லை. இதனால் பலர் நேரில் சென்று அதிகாரிகளிடம் முறையிட்டனர். அதற்கு அதிகாரிகள் 10 நிமிடத்தில் மின்சாரம் வந்துவிடும் என்று தெரிவித்தனர். ஆனால் நள்ளிரவு 2 மணி வரை மின்சாரம் வரவில்லை. மேலும் 2 மணி முதல் 3 மணி வரை குறைந்த மின்னழுத்தம் அதிகப்படியான மின்னழுத்தமும் வந்ததால் பொதுமக்கள் தூங்காமல் கடும் அவதிப்பட்டனர்.

இதேபோன்று ஆவடி, பட்டாபிராம் போன்ற பகுதிகளிலும் இரவு 4 மணி நேரம் மின் தடை ஏற்பட்டதால் பொதுமக்கள் கடும் அவதி அடைந்தனர். கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் தொடர் மின் வெட்டால் வெப்பத்தில் இரவு முழுவதும் தூக்கத்தை தொலைத்து அவதிப்பட்டு வருகின்றனர்.

கோடை காலங்களில் இதுபோன்று மின் வெட்டு வராமல் சீரான மின் விநியோகம் செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

இந்த நிலையில், சென்னையில் மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

தமிழ்நாடுமின்வாரியம் ரூ.2.5 லட்சம் கோடி கடனில் உள்ளது. பல டெண்டர் முறைகேடுகள் நடந்துள்ளன. நிர்வாகத்தை சீரமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். முன்பு மின் துறையை நிர்வகித்தவர்கள்செய்த பணிகள் குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். மக்களின் புகார்கள் மீது உடனுக்குடன்நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மின்தடை குறித்து புகார் அளித்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

மின் வயர்கள் துண்டிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. மின்வாரியத்தில் தவறுகள் நேர்ந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு லட்சம் பணியாளர்கள் இருக்க வேண்டிய மின்வாரியத்து றையில் 52,000 ஆயிரம் பேர் மட்டுமே உள்ளனர். திருப்பரங்குன்றம் கோவிலுக்கு சென்ற பொது எந்த விதிகளை பின்பற்றவும் அறிவுறுத்தப்படவில்லை.

தமிழ்நாட்டில் மின் கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இல்லை. சென்னையில் சீரமைப்பு பணிகள் நடைபெறுவதால் மின் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மின்தடை குறித்து புகார்கள் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## முதல்அமைச்சர் விஜயுடன் கல்லூரியில் பயணித்தேன்: சினிமாத் துறையில் பயணித்தேன்..கடைசி வரை அவருடன் இருப்பேன்

### அமைச்சர் ஸ்ரீநாத் பேட்டி




சென்னை, மே. 22

தமிழகத்தில் நடந்து முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலில் தவெக வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது. முதல்அமைச்சர் விஜய் தமிழ்நாட்டின் 14வதுமுதல்அமைச்சராக பொறுப்பேற்று இருக்கிறார்.

அவர் முதல்அமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து வழிபாட்டுத்தலங்கள் பள்ளிகளுக்கு அருகில் உள்ள மதுக்கடைகளை மூடுதல், கிட்னி விவகாரம் குறித்த தீவிர விசாரணை, போதை தடுப்பு அலகுகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல மக்கள்நலத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறார் இது மக்களிடையே நல்ல வரவேற்பையும் பெற்று வருகிறது.

இந்தநிலையில், நடிகர் ஸ்ரீநாத் விஜய்யின் நீண்ட கால நண்பர். விஜய்யின் மிக மிக நெருங்கிய நண்பரான இவர் அவரின் ஆரம்பகால திரையுலகம் முதலே நண்பராக இருந்து வருகிறார். விஜய் கட்சி தொடங்கியது முதலே அவருக்கு ஆதரவாக செயல்பட்டு வந்த ஸ்ரீநாத் தன்னையும் தவெகவில் இணைத்துக் கொண்டு செயல்பட்டார்.

அவருக்கு தூத்துக்குடியில் போட்டியிட விஜய் வாய்ப்பு வழங்கினார். அந்த வாய்ப்பை பயன்படுத்தி தீவிர பரப்புரையில் ஈடுபட்ட ஸ்ரீநாத் முன்னாள் அமைச்சரான கீதா ஜீவனை வீழ்த்தி வெற்றி பெற்றார். தமிழக வெற்றிக் கழகத்தின் வரலாற்றில் அவர்களின் முதல் சட்டமன்ற உறுப்பினர் ஸ்ரீநாத்தே ஆவார்.

52 வயதான ஸ்ரீநாத் சென்னையில் பிறந்தவர். இவர் 1973ம் ஆண்டு ஜூலை 18ம் தேதி பிறந்துள்ளார். விஜய்யின் கல்லூரி கால நண்பரான இவர் நாளைய தீர்ப்பு படத்திலே அவருக்கு நண்பராக நடித்து விஜய்யுடன் இணைந்து அவரும் திரையுலகில் அறிமுகமானார். பின்னர், மாண்புமிகு மாணவன் படத்திலும் விஜய்யுடன் இணைந்து நடித்தார்.

பின்னர், 12 பி படத்தில் நடித்ததுடன் உதவி இயக்குனராகவும் பணியாற்றினார். ஏய் நீ ரொம்ப அழகா இருக்கே, காதல் வைரஸ், அலை, உள்ளம் கேட்குமே, வட்டாரம் ஆகிய படங்களில் நடித்துள்ளார். உள்ளம் கேட்குமே, உன்னாலே உன்னாலே, சந்தோஷ் சுப்ரமணியம், தாம் தூம் ஆகிய படங்கள் மூலம் இவர் மிகவும் பிரபலம் ஆனார். குட்டி, உத்தமபுத்திரன், ரௌத்திரம், மனம் கொத்தி பறவை ஆகிய படங்களிலும் இவரது நகைச்சுவை பிரபலம். விஜய்யுடன் இவர் வேட்டைக்காரன், மாஸ்டர் படத்தில் இணைந்து நடித்தார். ஜனநாயகன் படத்திலும் இவர் நடித்திருப்பதாக கூறப்படுகிறது.

நடிகராக மட்டுமின்றி இயக்குனராக முத்திரை, வல்லவனுக்கு புல்லும் ஆயுதம், லெக் பீஸ் ஆகிய படங்களை இயக்கியுள்ளார். விஜய் தொலைக்காட்சியில் பிரபலமான காதலிக்க நேரமில்லை சீரியலிலும் நடித்துள்ளார்.

நடிகராகவும், விஜய்யின் நண்பராகவும் அறியப்பட்ட ஸ்ரீநாத் தவெக அலையால் தூத்துக்குடியில் வெற்றி பெற்றார்.

இந்தநிலையில், தமிழக அமைச்சரவையில் புதிதாக 23 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கவர்னர் அர்லேகர் இன்று பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இருவர் அமைச்சர்களாக பதவியேற்றனர். முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் பட்டியலினத்தை சேர்ந்த 7 பேர் பதவியேற்றுள்ளனர்.

இந்த நிலையில், புதிதாக பதவி ஏற்றுள்ள அமைச்சர்களுக்கு துறைகள் ஒதுக்கீடு செய்து கவர்னர் அர்லேகர் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிட்டுள்ளார். விஜயின்நண்பரும்தூத்துக்குடி எம்.எல்.ஏ.வுமானஸ்ரீநாத்திற்கு தமிழக அமைச்சரவையில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

எனது தலைவர்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். நாங்கள் அனைத்துத் தடைகளையும் உடைப்போம். நமது மக்கள் சந்தித்து வரும் அனைத்துப் பிரச்சினைகளையும் நான் சரிசெய்து, அவர்கள் அமைதியான சமூக வாழ்க்கையைவாழ்வதை உறுதி செய்வேன். மீனவர்கள் பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் இருப்பதையும், மற்றவர்களுக்கு எந்த இடையூறும் இன்றி அவர்கள் தங்கள் வேலையைச் செய்வதையும் நாங்கள் உறுதி செய்வோம்.

முதல் நாளிலிருந்தே, எனது தலைவரிடமிருந்து ஒரு நண்பராக நான் நிறைய கற்று வருகிறேன்.

அவரோடு கல்லூரியில் பயணித்தேன், சினிமாத் துறையில் பயணித்தேன். இப்பொழுது அரசியலில் பயணிக்கிறேன். இப்போது ஒரு அரசியல்வாதியாக அவரிடமிருந்து நான் தினமும் நிறைய கற்றுக் கொள்கிறேன். அவர் எப்போதும் ஒரு சிறந்த தலைவராக இருப்பார். அவருடைய ஒழுக்கம், நேரந்தவறாமை, நேர்மை மற்றும் கருணை ஆகியவற்றை நான் எப்போதும் பின்பற்றுவேன். கடைசி வரை அவருடன் இருப்பேன் என்றார்.

## முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் வி.சி.க. இடம் பெறுமா..?

### திருமாவளவன் பதில்



சென்னை, மே. 22

தமிழக அமைச்சரவையில் புதிதாக 23 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கவர்னர் அர்லேகர் இன்று பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இருவர் அமைச்சர்களாக பதவியேற்றனர். முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் பட்டியலினத்தை சேர்ந்த 7 பேர் பதவியேற்றுள்ளனர்.

புதிதாக பதவி ஏற்றுள்ள அமைச்சர்களுக்கு துறைகள் ஒதுக்கீடு செய்து கவர்னர் அர்லேகர் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிட்டார். இதன்படி முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் இதுவரை இடம்பெற்றுள்ள 33 பேருக்கும் துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த சூழலில், தமிழக அமைச்சரவையில் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை ஆகியவை இதுவரை யாருக்கும் ஒதுக்கப்படவில்லை. அமைச்சரவையில் இடம்பெறுவதாக சொல்லப்படும் ஐ.யு.எம்.எல்.க்கு சிறுபான்மையினர் நலத்துறையும், வி.சி.க.வுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையும் ஒதுக்கப்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் தமிழக அமைச்சரவையில் விசிக இடம் பெறுவது குறித்து இன்று மாலைக்குள் அறிவிக்கப்படும் என்று அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் அறிவித்துள்ளார். மேலும் பெரும்பாலான நிர்வாகிகள் அமைச்சரவையில் இடம் பெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர் என்றும், உயர்மட்ட நிர்வாகிகளிடம் ஆலோசித்து சற்று நேரத்தில் அறிவிப்பு வெளியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.


தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 - 70102 64701

# கேரள மாநிலத்தைச் சேர்ந்த தம்பதியினரை தமிழக போக்குவரத்து புலனாய்வு

## போலீசார் அலைக்கழிப்பதாக குற்றச்சாட்டு

கோவை மே:22

கேரள மாநிலத்தைச் சேர்ந்த தம்பதியினரை தமிழக போக்குவரத்து புலனாய்வு போலீசார் அலைக்கழிப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பாக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்தைச்சேர்ந்த விபின் ஜோஸ், அவரது மனைவி அனு மற்றும் இரு குழந்தைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெங்களூரு செல்லும் நோக்கில் கோவை வழியாக காரில் பயணம் மேற்கொண்டனர். அப்போது பட்டணம் புதூர் அருகே பாலக்காடு பைபாஸ் சாலையில் சென்று கொண்டிருந்த போது, ஹரியானா மாநிலத்தைச்சேர்ந்த டிரக் ஒன்று அவர்களது காரின் பின்புறத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து, கோவை கிழக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவில் தம்பதியினர் புகார் அளித்துள்ளனர். ஆனால், புகாரை பெற்ற போலீசார் உடனடியாக சி.எஸ்.ஆர் வழங்காமல் இழுத்தடித்ததாக அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். இதுகுறித்து விபின் ஜோஸ் கூறுகையில், "கேரளாவில் ஆன்லைனில் புகார் அளித்



தாலே உடனடியாக சி.எஸ்.ஆர் கிடைத்து விடுகிறது.

ஆனால் தமிழகத்தில் காவல் துறையினர் 'சி.எம் பதவியேற்பு பணி உள்ளது' என கூறி எங்களை அலைக்கழித்தனர்" என்றார். மேலும், அனுகூறுகையில், "விபத்துக்குப் பிறகு கோவை கிழக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவில் புகார் அளித்தோம். அதன் பின்னரும் சி.எஸ்.ஆர் வழங்க தாமதம் செய்தனர். அதனால் பயத்துடன் பெங்களூரு சென்றோம். பின்னர் காப்பீட்டு நடவடிக்கைக்காக சி.எஸ்.ஆர் தேவைப்பட்டதால் மீண்டும் காவல் நிலையத்திற்கு சென்றபோது கூடுதல் ஆவணங்கள் கேட்டனர். அவற்றையும் கொடுத்த பிறகு மதியம் 1.15 மணி முதல் இரவு 9 மணி வரை குழந்தைகளுடன் காவல் நிலையத்தில் காத்திருந்தோம். ஆய்வாளர் இல்லாததால் திங்கட்கிழமை வந்து வாங்கிக்கொள்ளுமாறு கூறினர்.

பின்னர் நண்பர்கள் சென்றபோதும் சி.எஸ்.ஆர் வழங்காமல், நாங்களே நேரில் வர வேண்டும் என கூறினர். இன்று நேரில் வந்து தான் சி.எஸ்.ஆர் பெற்றுக்கொண்டோம்" என்றார். மேலும், "கேரளாவில் ஆன்லைனில் புகார் அளித்தாலே உடனடியாக ஆவணம் கிடைக்கும் நிலையில், தமிழக போக்குவரத்து புலனாய்வு போலீசார் எங்களை தேவையில்லாமல் அலைக்கழித்ததை வன்மையாக கண்டிக்கிறோம்" என்றும் தெரிவித்தார். இந்த சம்பவம் தொடர்பாக தமிழக அரசு மற்றும் காவல்துறை உயரதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட தம்பதியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 100 நாள் வேலை திட்டம் கோரி விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர் மே 22

தஞ்சாவூர் மாவட்டத்தில் 100 நாள் வேலை திட்டத்தை முறையாக அமல்படுத்த கோரி பல்வேறு இடங்களில் விவசாய தொழிலாள ர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இதில் 100 நாள் வேலை திட்டத் தின் பெயரை மத்திய அரசு மாற்றி யதை ரத்து செய்ய வேண்டும், வேலை அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் வேலை வழங்க வேண்டும். அனைத்து ஊராட்சிகளிலும் வேலையை உடனே தொடங்க வேண்டும். தொழிலாளர்களுக்கு சட்டப்படி கூலி ரூபாய் 336 ஐ குறைக்காமல் வழங்க வேண்டும் என்பன உள்



ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தி முழக்கம் எழுப்பப்பட்டன

திருவையாறு ஒன்றியம் காருகுடியில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்க மாவட்ட தலைவர் ஆர் பிரதீப் ராஜ்குமார், விளாங்குடியில் சங்கத்தின் ஒன்றிய குழு உறுப்பினர் செந்தாமரை செல்வி ஆகியோர் தலைமை வகித்தனர் இதில் தியாகராஜன், கலியபெரு மாள், ஜானகி, பரமேஸ்வரி, சிவகாமி, பரமேஸ்வரி, திவ்யகுமாரி உள்பட ஏராளமான விவசாய தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். இதே போல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### தஞ்சாவூர் ரயில் நிலைய டிக்கெட் கவுண்டர்களில்

# இணையவழியில் கட்டணம் செலுத்த வற்புறுத்தக் கூடாது; முரசொலி எம்பி வலியுறுத்தினார்

தஞ்சாவூர் மே 22

தஞ்சாவூர் ரயில் நிலைய டிக்கெட் கவுண்டர்களில் பயணிகளிடம் போன்பே ,ஜிபே மூலம் பணம் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்த கூடாது என தஞ்சாவூர் முரசொலி எம்.பி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தஞ்சாவூர் ரயில் நிலையத்தி லிருந்து தஞ்சாவூர் வழியாகவும் தினம் ஏராளமான ரயில்கள் இயக்கப்பட்டுவருகிறது. முன்பதிவு இல்லாத டிக்கெட்டுகள், நடைமேடை டிக்கெட், முன்பதிவு டிக்கெட் என அனைத்து டிக்கெட் சாதனங்கள் நிறுவப்பட்டு உள்ளது.

கியூ ஆர் கோடு வை பயன்படுத்தி ஸ்கேன் செய்து போன்பே, கூகுள் பே ,பேடிஎம் போன்ற யுபிஐ செயல்கள் மூலம் பணம் செலுத்தி பயணிகள் டிக்கெட் பெற்று வருகின்றனர்.

இதே போல் பணம் செலுத்தியும் டிக்கெட் பெற்றுக் கொள்ளலாம். இது தொடர்பாக டிக்கெட் கவுண்டர்களில் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் உள்ள 4 டிக்கெட் கவுண்டர்களில் டிக்கெட் வாங்குவதற்கு உள்ள அதிகாரிகள் பயணிகளிடம் கியூ ஆர்



கோடுவை பயன்படுத்தி யூ பி ஐ செயலி மூலம் மட்டுமே பணம் செலுத்த வேண்டும் எனவும், பணம் பெற மாட்டோம் என கூறியதாக புகார் எழுந்தது

இதையடுத்து முரசொலி எம்பி தஞ்சாவூர் ரெயில் நிலையத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்துடன், இது தொடர்பாக ரயில்வே அதிகாரி களை சந்தித்து விளக்கம் கேட்டார் அப்போது யூபிஐ செயலிகள் மூலம் மட்டுமின்றி பணத்தைப் பெற்றுக் கொண்டும் டிக்கெட் வழங்கப்படுகிறது .இது தொடர்பாக ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு இருக்கிறது எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசா யிகள் ,விவசாய தொழிலாளர்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர். அவர்கள் எல்லோரிடமும் யூபிஐ செயலிக்களை பயன்படுத் தும் வகையில் செல்போன் இருக்க வாய்ப்பு இல்லை .எனவே பணத் தைப் பெற்றுக் கொண்டு டிக்கெட் வழங்க முன்னுரிமை அளிக்க வேண்டும் என முரசொலி எம்.பி தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் செய்தி யாளர்களிடம் கூறுகையில்:

தஞ்சாவூர் விவசாயம் சார்ந்த மாவட்டமாகும் . தஞ்சாவூர் மாவட்ட த்தில் அதிகப்படியாக கிராமங்கள் உள்ளன. பஸ் பயணத்தை விட ரயில் பயணத்தையே பொதுமக்கள் அதிகளவில் விரும்புகிறார்கள்

எனவே தஞ்சாவூர் ரயில் நிலையத் திற்கு வரும் பயணிகளிடம் டிக்கெட் எடுக்கும் போது போன்பே, ஜிபே மூலம் தான் பணம் செலுத்த வேண் டும் என அறிவித்த கூடாது. பணத்தைப் பெற்றுக் கொண்டு டிக்கெட் வழங்க வேண்டும் என்று அதிகாரிகளிடம் கூறியதாக தெரிவித்தார்.

# வேலூரில் தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை திறப்பு விழா

## சிறப்பு சலுகையாக இலவச கண் பரிசோதனை முகாம்



வேலூர், மே 22

கோயம்புத்தூரை தலைமையிடமாக கொண்டு கடந்த 40 ஆண்டுகளாக தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை இயங்கி வருகிறது. அதன் ஒருபகுதியாக

வேலூர் மாவட்டம் காட்பாடி விருதம்பட்டு பாலாறு பழைய மேம்பாலம் அருகே பகுதியில் மருத்துவமனை கிளைசெயல்பட்டுவருகிறது. இதன்29வதுகிளையாகவும் வேலூரில் 2வது கிளையுமாக ஆரணிசாலையில் புதிதாக துவங்கப்பட்டு திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவில் தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை துணைத்தலைவர் உலகநாதன் முன்னிலை வகித்தார். மருத்துவமனை தலைமை மருத்துவர் மரு.மாதவி, வேலூர் ஆப்டிக்கல் அசோசியேஷன் நிர்வாகிகள் ஆகியோர் தலைமை தாங்கி ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினர். இதில், டாக்டர்கள் வேலூர் ஆப்டிக்கல் அசோசியேஷன் சங்க உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து கண்மருத்துவர் மாதவி கூறுகையில், பலதரப்பட்ட மக்களுக்கு தரமான மற்றும் மேம்பட்ட கண் மருத்துவ சிகிச்சை வழங்க வேண்டும் என்பதே எங்கள் மருத்துவமனையின் முக்கிய நோக்கமாகும். கண்புரைக்கு ஊசி மற்றும் வலி இல்லாமல் சொட்டு மருந்து மூலமாகவும், ஜெர்மனியில் இருந்து வரவழைக்கப்பட்ட சைமர் ரோபோட்டிக் எந்திரம் மூலம் பிளேடு இல்லாமலும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

கண்நீர் அழுத்தநோய், விழித்திரை நோய்க்கும் மேம்படுத்தப்பட்ட சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் திறப்புவிழா சலுகையாக ஜூன் 20ந் தேதிவரை இலசவ கண் பரிசோதனை முகாம் புதிதாக துவங்கப்பட்ட இக்கிளையில் நடக்கிறது. வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் இதனை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.



# தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலக வளாகம் பராமரிப்பு பணிகள்

## விரைந்து முடிக்க கலெக்டர் அறிவுறுத்தல்

தஞ்சாவூர் மே 22

தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூலக வளாகம் பராமரிப்பு பணிகளை விரைந்து முடிக்க மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் நேரில் பார்வையிட்டு ஆய்வு அறிவுத்தினார்.

தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தில் நாள் தோறும் ஆயிரக்கணக்கானமக்கள்வந்து செல்கிறார்கள். அவ்வாறு வருகை தரும் பொதுமக்களின் நலனிற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் தமிழக தொல்லியல் துறையின் சார்பில் ரூபாய் 19 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இதில் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டு சரஸ்வதி மகால் நூலகம் பழமை மாறாமல் பராமிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் சுவர் , மேற்கூரைகள், வளை வுகள் மற்றும் தளங்கள் சீரமைப்பு, நூலக கட்டிடத்தில் மழைநீர் உட்புகாத வண்ணம் மேற்பகுதியில் ஓடுகள் அமைக்கும் பணி, பழமை யான முறையில் ஸ்டைல்ஸ் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் ரூபாய் 7 கோடி மதிப்பீட் டில் சரஸ்வதி மகால் நூலக வளாக த்தை சுற்றிலும் பொதுமக்கள் வசதிக்காக அனைத்து பகுதிகளி லும் நடை பாதை வசதிகள் மேம்படுத்தும் வகையில் புதிதாக கருங்கல் தளம் அமைக்கப்பட்டு, வரும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இதனை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் நேரில் பார்வையிட்டு விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது தொல்லியல் துறையின் உதவி இயக்குனர் தங்கதுரை, சரஸ்வதி மகால் நூலகத்தின் நிர்வாக அலுவலர் மோகன், பொதுப்பணி துறையின் உதவி பொறியாளர் மயில்ராஜ் மற்றும் பலர் உடன் இருந்தனர்



கிருஷ்ணகிரிமாவட்டம், ஓசூர்பத்தலப்பள்ளிமார்க்கெட் அருகில்நடைபெற்றுவரும்உயர்மட்டமேம்பாலபணிகள் மற்றும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் இணைப்பு சாலை அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி தேசிய நெடுஞ்சாலைத்துறை திட்ட அலுவலர் .ரமேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் .கலா, .வெங்கடேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### நீட்தேர்வு ரத்து செய்ய வலியுறுத்தி

# தஞ்சாவூரில் இளைஞர்கள், மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர் மே 22

தஞ்சாவூர் தலைமை தபால் அலுவலகம் அருகே இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், இந்திய மாணவர் சங்கம் ,அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், அகில இந்திய மாணவர் பெருமன்றம் ஆகியவை சார்பில் ஏழை மாணவர்களின் மருத்துவ கனவை சிதைக்கு ம் நீட் தேர்வுவை ரத்து செய்ய வலி யுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இதற்கு இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாவட்ட செயலாளர் அருளரசன் தலைமை தாங்கினார், மாவட்ட தலைவர் அர்ஜுனன் முன்னிலை வகித்தார். அகில இந்திய மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பாரதி, மாவட்ட தலைவர் காரல் மார்க்ஸ்,




இந்திய மாணவர் சங்க மாநில குழு உறுப்பினர் தர்ஷினி ,இந்திய ஜனநாயக வாலிபர் சங்க நகர தலைவர் நாகராஜ் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் நீட் தேர்வு சமூக நீதிக்கு எதிரானது மட்டுமன்றி ,இட ஒதுக்கீடும் கேள்விக்குறியாக உள்ளது. ஏழை எளிய மாணவர்களி ன் மருத்துவ கனவை சிதைப்பதுட ன் தொடர் தற்கொலைக்கு காரண மான நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும். பிளஸ் டூ வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவர் படிப்பில் மாணவர் சேர்க்கை நடத்த வேண்டும். தேசிய தேர்வு முகமை கலைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன

### பர்கூர் பேருந்து நிலையத்தில்

# அதிமுக சார்பில் அம்மா நீர் மோர் பந்தலை இ.சி.கோவிந்தராசன் எம்எல்ஏ திறந்து வைத்தார்

கிருஷ்ணகிரி, மே. 22

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்ட மன்ற தொகுதி பர்கூர் பேருந்து நிலையத்தில் அதிமுக அம்மா நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர்

இ.சி.கோவிந்தராசன் எம்எல்ஏ கலந்துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் நகர செயலாளர் கணேசன், முன்னாள் துணைத் தலைவர் ராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சின்னத்தம்பி ,பழனி, சரவணன், பூபாலன், சின்னசாமி, சசிகுமார், ராஜேந்திரன், சக்திவேல்,



செல்வன், மனோகரன், வாசன் மற்றும் வெங்கடப்பன், ராஜசேகர், திம்மராயன், ரஞ்சித்குமார், பேட்டை ரவி சென்னப்பன், பெருமாள், ராஜ்குமார், செக்கில் நத்தம் கிளை செயலாளர் எம்.செல்வராஜ், கிருஷ்ணமூர்த்தி, கொய்யா குட்டி ராஜா, உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகளும், சார்பு அணி நிர்வாகிகளும், மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அரிசி ஒதுக்கீட்டை உயர்த்த கோரி அமைச்சர் நேரில் சந்தித்த MLA முகுந்தன்

கிருஷ்ணகிரி, மே. 22

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளிகளுக்கான மாதாந்திர அரிசி ஒதுக்கீட்டை உயர்த்தி வழங்க வேண்டும் என தமிழ் நாடு உணவு நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சரை சென்னை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து கோரிக்கை மனு வழங்கினார்.

அந்த மனுவில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நாளொன்றுக்கு தற்போது 1,200க்கும் மேற்பட்ட உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வரும் நிலையில், மாதந்தோறும் வெறும் 2,500 கிலோ அரிசி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுவது கடுமையான பற்றாக்குறையை ஏற்படுத்தி வருவதாக குறிப்பிட்டு ள்ளார்.

மருத்துவமனை தொடங்கப்பட்ட ஆரம்ப காலத்தில் சுமார் 400 நோயாளி



கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வந்த நிலையில் நிர்ணயம் செய்யப்பட்ட அரிசி ஒதுக்கீடு, தற்போதைய தேவைக்கு முற்றிலும் போதாமையாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால், ஏழை எளிய நோயாளிகளுக்கு தினசரி தரமான உணவு வழங்குவதில் மருத்துவமனை நிர்வாகம் கடும் சிரமத்தை எதிர்கொண்டு வருவதாகவும், உடனடியாக துறையினர் மூலம் கள ஆய்வு மேற்கொண்டு தற்போதைய 2,500 கிலோ அரிசி ஒதுக்கீட்டை 4,500 கிலோவாக உயர்த்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் MLA முகுந்தன் வலியுறுத்தினார்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.டி என்.சி.ஸ்.சி.மூலம் ஒவ்வொரு மாத தொடக்கத்திலேயே தடையின்றி அரிசி விநியோகம் நடைபெற வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த கோரிக்கையை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தரப்பில் உறுதியளிக்கப் பட்டதாகதகவல் வெளியாகியுள்ளது.

### பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில்

# கிருஷ்ணகிரி தனியார் பள்ளி மாணவி மாநில அளவில் முதலிடம்; மாணவிக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்த பள்ளி நிர்வாகம்.மருத்துவம் படிப்பதே எனது ஆசை என்று மாணவி பேட்டி.

கிருஷ்ணகிரி, மே. 22

தமிழகத்தில் நடந்து முடிந்த பத்தாம் வகுப்பு பொது தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டன. இதில் கிருஷ்ணகிரி செந்தில்மெட்ரிக்பள்ளி, மாநில அளவில் முதல் இடம் பிடித்துள்ளது. அப்பள்ளியில் பயின்ற சௌஜன்யா என்ற மாணவி மாநில அளவில் 499 மதிபெண்கள் பெற்று முதலிடம் பிடித்துள்ளார். மாநில அளவில் சாதனை படைத்த மாணவிக்கு, பள்ளி நிர்வாகத்தின் சார்பில் செந்தில் கல்வி நிறுவனங்களின் தலைவர் கந்தசாமி, செயலாளர் தனசேகர் ஆகியோர் மாணவிக்கு சால்வை அணிவித்து பூங்கொத்து வழங்கியும், பாராட்டினர். மேலும் சேலம் மற்றும் தர்மபுரி



மாவட்டத்தில் இயங்கி வரும் இப்பள்ளி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு துவங்கப்பட்டது. துவங்கப்பட்ட முதல் வருடத்திலேயே மாநில அளவில் சாதனை படைத்துள்ளது என பள்ளியின் செயலாளர் தனசேகர் அவர்கள் பெருமிதம் தெரிவித்தார். மேலும் மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவி சௌஜன்யா கூறுகையில் மாநில அளவிலும் கிருஷ்ணகிரி மாவட்ட அளவிலும் 499 மதிப்பெண்கள் எடுத்துள்ளேன், இந்த மதிப்பெண்கள் எடுக்க உறுதுணையாக இருந்த பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் தொடர்ந்து இப்பள்ளியில் 11ம் வகுப்பில் கணிதம், அறிவியல் பாடப் பிரிவு எடுத்து படித்து மருத்துவர் ஆவதே எனது லட்சியம் என்று குறிப்பிட்டார்.

# கிருஷ்ணகிரி பாரத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் சாதனை



கிருஷ்ணகிரி, மே 22

கிருஷ்ணகிரி பாரத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு பொது தேர்வு முடிவில் இரு மாணவிகள்,497 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்தனர். கிருஷ்ணகிரி பாரத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு தேர்வில் 100 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்று சாதனை படைத்தனர். தருணிகா அருள் மற்றும் மகிமா ஆகிய இரு மாணவியர், 500க்கு, 497 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் மூன்றாம் இடம் பிடித்தனர். மாணவி வினிதா 496 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தையும், மாணவிகள் கிருபா ஸ்ரீ மற்றும் தணிகாஸ்ரீ 493 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தையும், பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்தனர். பள்ளியில் முதலிடம் பெற்ற மகிமா பாட வாரியாக தமிழ்– 98 ஆங்கிலம்– 99, கணிதம் – 100, அறிவியல் – 100, சமூக அறிவியல் – 100 என, 497 மதிப்பெண்களும், தருணிகா அருள் பாட வாரியாக தமிழ் – 98, ஆங்கிலம் –99, கணிதம் –100, அறிவியல் – 100, சமூக அறிவியல் – 100 என, 497 மதிப்பெண்கள் பெற்றனர். இரண்டாம் இடம் பெற்ற வினிதா பாட வாரியாக தமிழ் 98 ஆங்கிலம் 99,கணிதம் 99, அறிவியல் 100, சமூக அறிவியலில் 100 என 496 மதிப்பெண்கள் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும் 500க்கு 450 மதிப்பெண்களுக்கு மேல் 45 மாணவ, மாணவியர் பெற்றுள்ளனர். பாடவாரியாக தமிழ்பாடத்தில் 90 மதிப்பெண்களுக்கு மேல், 42 மாணவ, மாணவியரும், ஆங்கிலத்தில், 90 மதிப்பெண்களுக்கு மேல், 70 மாணவ, மாணவிகளும், கணிதத்தில், 100 மதிப்பெண்கள், 40 மாணவ, மாணவியரும், 90 மதிப்பெண்களுக்கு மேல், 25 மாணவ, மாணவியரும் அறிவியலில், 100க்கு 100 மதிப்பெண்கள், 16 மாணவ, மாணவியரும், 90 மதிப்பெண்களுக்கு மேல், 80 மாணவ, மாணவியரும், சமூக அறிவியிலில், 13 மாணவ. மாணவியர், 100 மதிப்பெண்களும், 90 மதிப்பெண்களுக்கு மேல் 56 மாணவ, மாணவியரும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்து உள்ளனர். சாதனை படைத்த மாணவ, மாணவியருக்கு பள்ளியின் நிறுவனர் மணி பரிசுகள் அளித்து பாராட்டி பேசினார். தாளாளர் கிருஷ்ணவேணி மணி, பாரத் கல்வி அறக்கட்டளை இயக்குனர் டாக்டர் சந்தோஷ், முதல்வர் நசீர் பாஷா மற்றும் துணை முதல்வர் பெரியண்ணன் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் பாராட்டினர்.

## ஆண்டார்குளம் தெங்கம்புதூர் பகுதியில்

# கஞ்சா மற்றும் மது பாட்டில்கள் விற்பனை செய்தவர்களை பிடித்து சுசீந்திரம் காவல்துறையினர் விசாரணை

சுசீந்திரம் மே.22

சுசீந்திரம் அருகே உள்ள ஆண்டார்குளம் பகுதியில் சுசீந்திரம் காவல் உதவி ஆய்வாளர் தனிஷ் லியோன் ரோந்து பணி மேற்கொள்ளும் போது ஆண்டார்குளம் குளக்கரை பகுதியில்சந்தேகப்படும்படியாக நின்ற நபர்களை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் அவர்கள் ஆண்டார்குளத்தைச் சார்ந்த சுஜின் 22என்பதும் அதே பகுதியைச் சேர்ந்த லிபின் 21மற்றும் புத்தளம் பகுதியைச் சார்ந்த வைகுண்ட மணி 26 என்பதும் அவர்கள் அதிக லாப நோக்கத்தோடு அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா எனும் போதை பொருளை ஐந்து கிராம் விற்பனைக்கு வைத்திருந்தது தெரியவந்ததுஅவர்களை பிடித்து சுசிந்திரம் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் அதுபோல தெங்கம் புதூர் பகுதியில் காவல் உதவி ஆய்வாளர் தனிஸ் லியோன் ரோந்து பணி மேற்கொள்ளும் போது ஒரு நபர் கையில் பையோடு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார் அவரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில்அதிக லாப நோக்கத்தோடு கன்னியாகுமரி அருகே உள்ள வடக்கு குண்டல் பகுதியைச் சார்ந்த சண்முகசுந்தரம் 42 என்பவர் விற்பனைக்காக வைத்திருந்த 26 குவாட்டர் மது பாட்டில்களை பறிமுதல் செய்து சுசிந்திரம் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# வாஸன் கண் மருத்துவமனை தற்போது (இஎஸ்ஐ) தொழிலாளர் ஒப்பந்த அறிமுக விழா




கோவை மே:22

வாஸன் கண் மருத்துவமனை தற்போது இஎஸ்ஐ தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையுடன் இணைந்து கட்டணமில்லா இலவச கண் பரிசோதனை மற்றும் கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கான ஒப்பந்த அறிமுக விழா மற்றும் பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

வாஸன் கண் மருத்துவமனை தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையுடன் இணைந்து தற்போது இஎஸ்ஐ பயனாளர்களுக்கும் மற்றும் அவர்களின் குடும்பதினர்களுக்கும் இஎஸ்ஐ மருத்துவ காப்பீடு அட்டையின் மூலம்,கண் விழித்திரை சிகிச்சை ஆகிய மேற்கண்ட கண் சம்பந்தப்பட்ட மருத்துவத்தினை எங்களது மருத்துவமனையில் எந்த வித கட்டணமும் இல்லாமல் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்என்பதைகீழ்கண்ட இதன் அறிமுக விழா மற்றும் பத்திரிகையாளர்கள் சந்திப்பு வாஸன் கண் மருத்துவமனை ஆர் எஸ் புரம் கிளையில் நடைபெற்றது.

இதில் தலைமை மருத்துவர்கள் கண் விழித்திரை மற்றும்கண்புரைஅறுவை சிகிச்சை மருத்துவர் அனுஷா வெங்கட்ராமன் கண்புரை மற்றும் கண்ணீர் அழுத்த நோய் அறுவை சிகிச்சை தலைமை மருத்துவர் ஜெயமணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டு இந்த ஒப்பந்தத்தின் பயன்களை பொதுமக்களுக்கு தெரியபடுத்தினர்.

# இந்தியன் வங்கி கிராமப்புற சுய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி நிறுவனம் பீட்ஸ் நிறுவனம் சார்பில் தொழில் முனைவோருக்கான பயிற்சி சான்றிதழ்



திருப்பத்தூர்:மே:22,

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகர் பகுதி ராமக்காபேட்டையில் உள்ள பீட்ஸ் தொண்டு நிறுவன அலுவலகத்தில்

இந்தியன் வங்கி கிராமபுற உயர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி நிறுவனம் பீட்ஸ் தொண்டு நிறுவனம் இணைந்து மகளிர் சுய உதவி குழு பெண்கள் மற்றும் தேனி வளர்ப்பு மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி முடித்தோருக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் இந்தியன் வங்கி மூலம் தொழில் கடன் இணைப்பு செய்வதற்கானஏற்பாடுகள்குறித்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இந்திய நாட்டின் கிராமப்புற சுய வேலைவாய்ப்பு டைரக்டர் கணேசன், மாவட்ட தொழில் மையம் ஜெனரல் மேனேஜர் ரமேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர். பீட்ஸ் தொண்டு நிறுவன செயலாளர் ராதா மற்றும் தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் சங்கர் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

## தென்மேற்கு பருவமழை

# மழைநீர் வடிகால்களை சுத்தமாக வைத்துக் கொள்ள அதிகாரிகளுக்கு (பொ)மேயர் உத்தரவு!



நாகர்கோவில், மே. 22

நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை தோறும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறும் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் நாகர்கோவில் மாநகராட்சி (பொ)மேயர் மேரிபிரின்சிலதா பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை நேரில் பெற்றுக் கொண்டார். பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். இன்றைய கூட்டத்தில் 14 மனுக்கள் பெறப்பட்டது. மனுக்களில் பெரும்பாலும் குடிநீர், கழிவுநீர் ஓடை மற்றும் சாலை வசதிகள் தொடர்பான கோரிக்கை மனுக்கள் அதிகளவில் அளிக்கப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து, நாகர்கோவில் மாநகராட்சியில் தற்போது நடைபெற்று வரும் பல்வேறு உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மேயர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா மற்றும் மாநகராட்சி முக்கிய அதிகாரிகள், பொறியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்க உள்ளதைக் கருத்தில் கொண்டு, மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும்மழைநீர்வடிகால்ஓடைதூர்வாருதல் மற்றும் சீரமைப்புப் பணிகளை எவ்விதத் தொய்வுமின்றி, மிக விரைவாகச் செய்து முடிக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர் அறிவுறுத்தினர். மேலும், தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்காதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டது.

## கன்னியாகுமரி

# பகவதி அம்மன் கோயிலில் வைகாசி விசாகத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



கன்னியாகுமரி,மே.22

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஆண்டு தோறும் வைகாசி மாதம் 10 நாட்கள் விசாக திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான வைகாசி விசாக திருவிழா (வியாழக்கிழமை) காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதையொட்டி நேற்று முன்தினம் மாலை கோட்டார் இளங்கடை பட்டாரியர்சமுதாய ருத்ரபதி விநாயகர் செவ்விட்ட சாஸ்தா டிரஸ்ட் சாரபாக கொடிப்பட்டம் மரபு படி மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்து வந்து கோவிலில் சமர்ப்பிக்கப்பட்டது. இரவு 7.30 மணிக்கு மத ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டான நிகழ்ச்சியாக கன்னியாகுமரி ரட்சகர்தெரு கைலியார் குடும்பத்தை சேர்ந்த கிறிஸ்தவ மீனவர்கள் கொடிமர கயிறை மேள தாளம் முழங்க ஊர்வலமாக எடுத்து வந்து கோவிலில் ஒப்படைத்தனர்.

அதன்பிறகு நேற்று காலை கொடியேற்ற நிகழ்ச்சி தொடங்கியது. கொடிப்பட்டத்தை வெள்ளி பல்லக்கில் வைத்து பஞ்ச வாத்தியங்கள் முழங்க கோவிலின் உள்பிரகாரத்தை சுற்றி 3 முறை வலம் வர சய்து, பின்னர் பஞ்ச வாத்தியங்கள் முழங்க மாத்தூர் மணலிக்கரை மட தந்திரி சஜித் சங்கர நாராயணரு கொடி ஏற்றினார். நாகர்கோவில் தேவசம் தொகுதி கோவில்களின் கண்காணிப்பாளர் ஆனந்தன், கோவில் மேலாளர் ஆனந்த் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த திருவிழா 30ந்தேதி வரை 10 நாட்கள் நடக்கிறது.

விழாவை யொட்டி தினமும் அதி காலை 5 மணி மற்றும் காலை 10 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு அபிஷேக மும்,11.30 மணிக்கு அலங்கார தீபாராதனை யும், பகல் 12 மணிக்கு சிறப்பு அன்னதானமும் மாலை 6 மணிக்கு சமய உரையும், இரவு 9 மணிக்கு அம்மன் வாகனத்தில் எழுந்தருளி வீதி உலாவரும் நிகழ்ச்சியும் நடக்கிறது.

9ம் திருவிழாவான 29ந்தேதி காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் திருத்தேர் வடம் தொட்டு இழுத்துதேரோட்டம் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நடக்கிறது. இரவு9 மணிக்கு வெள்ளி கலைமான் வாகனத்தில் அம்மன் வீதிஉலா வருதலும் நடக்கிறது. 10ம் திருவிழாவான 30 ந்தேதி அதிகாலை 6.15 மணிக்கு மேல் 7 மணிக்குள் அம்மனுக்கு முக்கடல் சங்கமத்தில் ஆராட்டுநிகழ்ச்சியும் நடக்கிறது. மாலை 5 மணிக்கு மண்டகப்படி நிகழ்ச்சியும். இரவு 8 மணிக்கு நர்த்தன பஜனையும் நடக்கிறது. 9 மணிக்கு தெப்பத் திருவிழா நடக்கிறது. நள்ளிரவு 11 மணிக்கு முக்கடல் சங்கமத்தில் அம்மனுக்கு ஆராட்டு நிகழ்ச்சி நடக்கிறது.

## தென்காசி நகர காங்கிரஸ் கட்சியின் சார்பில்

# முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை



தென்காசி,மே.22

தென்காசி மாவட்டம் தென்காசிகாசிவிஸ்வநாதர் கோவில் அருகில் அமைந்துள்ள காந்தி சிலை முன்பு முன்னால் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினத்தை முன்னிட்டு தென்காசி மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் செல்வராஜ் தலைமையில் தென்காசி நகர காங்கிரஸ் கட்சியினர் ராஜீவ் காந்தியின்திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து தமிழக வெற்றிக் கழக அரசு ஆட்சி அமைக்க காங்கிரஸ் ஆதரவு கொடுத்த நிலையில் காங்கிரஸ் கட்சிக்கு அமைச்சரவையில் 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சுமார் 59 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சி நேரடியாக இணைகிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் ராஜேஷ்குமார் மற்றும் பி.விஸ்வநாதன் ஆகியோர் அமைச்சர்களாகப் பதவி யேற்றுள்ளனர்.

இந்த நிலையில் தென்காசி மாவட்டம் காசி விசுவநாதர் திருக்கோயில் முன்பாக காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் அமைச்சரவையில் இடம் பெற்றதை கொண்டாடும் விதமாக பட்டாசு வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். நிகழ்ச்சியில் தென்காசி நகர காங்கிரஸ் தலைவர் மாடசாமி ஜோதிடர் ,தென்காசி மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதயகிருஷ்ணன், தென்காசி மாவட்ட காங்கிரஸ் பொதுச் செயலாளர் சந்தோஷ் ,துணைத் தலைவர் சித்திக், வழக்கறிஞர் சிவா ,நகர பொருளாளர் ஈஸ்வரன் ,சிவாஜி மன்ற கணேசன் ,நகர்மன்ற உறுப்பினர்கள் ரபீக், சுப்ரமணியன் மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரியில்

# ஓவிய சிற்பக் கலை கலைஞர்களின் கலைக்காட்சி

கிருஷ்ணகிரி, மே. 22

ஓவியக்கலை என்னும் நான்காம் இயல், சிற்பக்கலை என்னும் ஐந்தாம் இயல் ஆகியவற்றினை வளர்த்திடும் நோக்கிலும். அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், வளரும் இளம் கலைஞர்களிடையே உள்ள கலைப்படைப்புத் திறனை வெளிக்கொணர்ந்து வளர்க்கும் நோக்கிலும், ஓவிய சிற்பக் கலைக்காட்சியினை 5000 பண்பாட்டுத்துறையின் வாயிலாக ஒவ்வொரு மண்டலத்திலும் நடத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பாக ஓவிய சிற்பக் கலைகாட்சி நடத்திடும் பொருட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓவியம் மற்றும் சிற்பக்கலைகளில் ஈடுபட்டு வரும் கலைஞர்களிடமிருந்து சிறந்த கலை படைப்புகளை பெற்று காட்சிப்படுத்தி, அவற்றில் சிறந்து விளங்கும் படைப்புகளை வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பட்டு, சிறந்த கலைப்படைப்புகளை வழங்கிய 7 கலைஞர்களுக்கு முதல் பரிசு ரூ.5,000, இரண்டாம் பரிசு ரூ.3,000, மூன்றாம் பரிசு ரூ.2000 என வழங்கப்பட உள்ளது.

எனவே ஓவியசிற்பக் கலைஞர்கள் தங்களுடைய படைப்பை காட்சிப்படுத்திட விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது சுயவிவரக்குறிப்புடன் ஓவியம் மற்றும் சிற்ப படைப்புகளை மண்டல உதவி இயக்குநர் கலை பண்பாட்டு மையம். திருப்பதிகவுண்டனூர்சாலை, ஆவின் பால் பண்ணை எதிரில் அய்யம்பெருமாம்பட்டி அஞ்சல், சேலம்636302 என்ற முகவரியில் அமைந்திருக்கும் அலுவலகத்தில் 15.06.2026 தேதிக்குள் நேரில் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இப்பொருண்மை குறித்து 0427 2386197 0 9944457244. என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.



## குமரி பகவதி அம்மன் கோவில்

# தெப்பக்குளத்துக்கு வந்த தண்ணீர்; மக்கள் மகிழ்ச்சி

கன்னியாகுமரி,மே.22

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலுக்கு சொந்தமான தெப்பக்குளம் வடக்கு ரத வீதியில் உள்ளது. இங்கு நிரப்பப்படும் தண்ணீர், குளத்தை சுற்றி உள்ள கருங்கற்களில் ஏற்பட்டு. உள்ள விரிசல் வழியாக கடலுக்கு வீணாக சென்று விடுகிறது. மேலும் தெப்பக் குளத்துக்கு தண்ணீர் வரும் பாபநாசம் கால்வாய் பராமரிக் கப்படாததால் செடி கொடிகள் படர்ந்து மண்மூடி தூர்ந்து போய் கிடக்கிறது. மேலும் கால்வாபில் ஆக்கிரமிப்புகளும் அதிகரித்து வருகின்றன. இதனால் தெப்பத் திருவிழா நாட்களில் தண்ணீர் இல்லாத வரண்ட தெப்பக் குளத்தில்தான் சில ஆண்டுகள் தெப்பத் திருவிழா நடந்தது.

பின்னர் தெப்பக்குளத்தை சீரமைக்க ரூ.41 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்பட்டது. ஆனால் சீரமைப்பு பணிகள் நடக்கவில்லை. தற்போது வைகாசி விசாக திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. வரும் 30ந் தேதி இரவு 9 மணிக்கு தெப்பத் திருவிழா நடக்கிறது.

இதனை கருத்தில் கொண்டு வநண்டு கிடைக்கும் பகவதி தெப்பக் குளத்தில் தண்ணீர் நிரப்பி தெப்பத் திருவிழா நடத்த பகவதி அம்மன் கோவில் பக்தர்கள் சங்கத்தினர் ஏற்பாடு செய்து வருகிறார்கள். இதற்காக மாதவபுரத்தில் உள்ள குமரிசால் குளத்தில் இருந்து ராட்சத குழாய் மூலம் தெப்பக் குளத்துக்கு தண்ணீர் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது. அதன்படி குமரி சால் குளத்தில் இருந்து மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டு குழாய் வழியாக நேற்று முன்தினம் இரவு தெப்பக்குளத்திற்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டது. வருகிற 30ந் தேதிக்குள் தண்ணீர் நிரப்பி தெப்ப திருவிழாவை நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இதனால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## கன்னியாகுமரியில்

# அதிகாலையில் விபத்து 6 பேர் தப்பினர்



கன்னியாகுமரி,மே.22

சுசீந்திரம் பகுதியை சேர்ந்த 6 பேர் அதிகாலை 3 மணி அளவில் கன்னியாகுமரியில் சூரியன் உதயமாகும் காட்சியை காண காரில் சென்றனர். கன்னியாகுமரி புதுக்கிராமம் பகுதியில் கார் சென்ற போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடி, சாலை ஓரத்தில் இருந்த மின் கம்பம் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில்மின்கம்பம்உடைந்து சேதம் அடைந்தது. காரின் முன் பகுதியும் அப்பளம் போல் நொறுங்கியது. இருப்பினும் காரில் இருந்த 6 பேரும் காயமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். மின்கம்பம் சேதம் அடைந்ததால் அந்த பகுதியில் மின்தடை ஏற்பட்டது. இதனால் அந்த பகுதி முழுவதும் அதிகாலை வேளையில் இருளில் மூழ்கியது. சேதம் அடைந்த மின் கம்பத்தை சீரமைக்கும் பணியில் மின்வாரிய ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். இது பற்றி தகவல் அறிந்ததும் கன்னியாகுமரி போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.



# ராயக்கோட்டை அருகே உள்ளுக்குறுக்கை தனியார் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளனது

ராயக்கோட்டை, மே. 22

தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் .ச.ஜோசப் விஜய் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் P. முகுந்தன்(MLA) உத்தரவின் பேரில்,கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட நகரகழகசெயலாளர்.M. சசிகுமார் மேற்பார்வையில், கிருஷ்ணகிரி To தேன்கனிக்கோட்டை செல்லும் சாந்தி என்கிறதனியார்பேருந்து உள்ளுகுறிக்கை வளைவில் ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து கவிழ்ந்தது 2.பேர். உயிரிழப்பு. 28 பேர் படுகாயமடைந்த நபர்களை கிருஷ்ணகிரி அரசு கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அனைவரையும் நேரில் சென்று ஆறுதல் கூறினார்..

# மத்திய மாவட்ட திமுக செயலாளர் ஆதரவாளர்களுடன் விலகல்: திருப்பூரில் தேயும் திமுக



திருப்பூர்:மே22

திருப்பூர், க. செல்வ ராஜ் தலைமைக்கு உருக்கமான எழுதிய விலகல் அறிவிப்பு கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது. "மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். நான் 1976ஆம் ஆண்டு தொடங்கி 50 வருட காலமாக கழகத்திற்கு விசுவாசமாக இருந்தேன். முதன்முதலாக தொழிற்சங்கத்தில்என்னை இணைத்துக் கொண்டு, தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்காக கழகத்தின் சார்பாக முன்னின்று போராடினேன். 1994ஆம் ஆண்டு திரு. வைகோ அவர்களின் பின்னால் பெருவாரியான திருப்பூர் கழக நிர்வாகிகள் சென்ற போதும், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், உங்களுக்கும் என்றென்றும் உறுதியாக இருக்க முடிவெடுத்தேன். மேலும், நகரக் கழக செயலாளராகவும் தொடர்ந்து பணியாற்றினேன்.

அதன்பின்னர், மக்களின் அன்பைப் பெற்று எனக்கு நகர சேர்மன், மேயர் போன்ற பொறுப்புகளை தலைவர் கலைஞர் அவர்களும், நீங்களும் அளித்தீர்கள். பின்னர் படிப்படியாக முன்னேறி மாநகர செயலாளராகவும், மாவட்ட செயலாளராகவும் தொடர்ந்து 2011 முதல் இதுவரை செயல்பட்டு வருகிறேன். கழகம் எதிர்க்கட்சியாக இருந்த 10 ஆண்டு காலத்தில் மக்கள் மற்றும் கழகப் போராட்டங்களில் தீவிரமாக பங்கேற்றதால் பல வழக்குகளை எதிர்கொண்டேன். பின்னர், 2021ஆம் ஆண்டு திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். கடந்த 5 வருட காலமாக சட்டமன்ற உறுப்பினராக, மாவட்ட செயலாளராகவும் மனசாட்சிப்படி திறம்பட செயலாற்றி னேன். இருப்பினும் 2026ஆம் ஆண்டு தொடக்கம் முதல் மாற்றுக் கட்சியிலிருந்து வந்தவர்களுக்கு அதிகாரம் மிக்க பதவிகள் வழங்கப்பட்டன. அப்பொழுது அது எனக்குள் மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியது. எனக்கு ஏற்பட்ட இந்த அதிருப்தியை தெரிந்து கொண்டு 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாகக் கூட பிற முக்கியக் கட்சிகளில் இருந்து எனக்கு அழைப்பு விடுத்தனர். அப்பொழுது கூட 'கழகத் தலைவர் என்னுடைய பாதையில்தான் நிற்பேன்' என்று கூறி அனைத்தையும் நிராகரித்தேன். ஆனால், 2026ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் திருப்பூரில் உள்ள ஒரு மிக முக்கியமான தொழில் அதிபரான டாலர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தங்களிடம் பொறுப்பேற்றதின் பேரில், திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பாக போட்டியிட மாற்றுக் கட்சியிலிருந்து வந்த திருப்பூர் மாநகராட்சிமேயர்தினேஷ்குமார் அவர்களை மேயர் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்ய வைத்து திருப்பூர் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கினீர்கள். 50 ஆண்டு காலமாக திருப்பூர் மாநகராட்சியில் கழகத்திற்காக மக்கள்பணி செய்து வந்த எனக்கு எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நான் விருப்ப மனு அளிக்காத பல்லடம் சட்டமன்றத் தொகுதி வழங்கப்பட்டது. அப்பொழுதும் கழகத் தலைவர் அவர்களுக்காக பொறுத்துக் கொண்டு, மாவட்ட செயலாளர் என்ற முறையில் கழகம் திருப்பூர் தெற்கு மற்றும் பல்லடம் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற கடுமையாக தேர்தல் பணியாற்றினேன். அது எனக்கு மிகப்பெரிய வருத்தத்தை ஏற்படுத்தியது. நான் கலைஞர் விசுவாசி. டாலர்பாலசுப்பிரமணியம் மற்றும் மேயர் தினேஷ்குமார் ஆகியோர் சட்டத்திற்கு மீறி செயல்படுவது குறித்து உளவுத் துறை மற்றும் காவல்துறை மூலமாக தலைமைக்கு ரிப்போர்ட் போயிருக்கும், அது தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. தலைமையிடம் பேசுவதற்குண்டான சூழ்நிலை எனக்குக் கிடைக்கவில்லை. அவருடைய பிஏ செந்திலிடம் அப்பாயிண்ட்மென்ட் கேட்டால் இன்னைக்கு நாளைக்கு என்று இழுத்தடிப்பார். ஒரு மாவட்ட செயலாளருக்கே இதான் நிலைமை. இருப்பினும் திமுக தான் எதிர்காலத்தில் மீண்டும் ஆட்சிக்கு வரும், அவரே (ஸ்டாலின்) மீண்டும் முதலமைச்சராக வருவார் என்பதில் எனக்கு திடமான நம்பிக்கை இருக்கிறது; அவருக்கு எதிராக என் யுத்தம் இல்லை. களஆய்வு முழுமையாக நடந்து, உண்மையில் உழைப்பவன் கட்சியில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த போராட்டம்; இதில் என்னையே நான் பலியிட்டுக் கொண்டேன். அவர் (பாலசுப்பிரமணியம்) செல்வாக்காகத் தலைவர் வீட்டில் இருப்பதால், கோர்ட்டில் இடைக்காலத் தடை (ஸ்டா) வாங்கி, கமிஷன் போட வைத்தார்கள். வக்கீல் நீதிமன்றத்தில் தவறான அறிக்கை கொடுத்ததன் மூலம், கலெக்டர் நீதிமன்ற உத்தரவைப் பெற்றுத் தந்துள்ளார். 12 வார காலத்திற்குள் அந்த இஸ்லாமிய மக்களுக்கு வேற இடம் கொடுக்க வேண்டும் என்று அந்த உத்தரவு கூறுகிறது. ஆனால், நான் என் சொந்தச் செலவில் அந்த கபஸ்தானுக்கு 1000 லோடு மண் போட்டு, அந்த மக்களைச் சரி பண்ணி வைத்துள்ளேன். தற்போது வேறெந்தக் கட்சியிலும் இணையும் எண்ணம் எனக்கு இல்லை. என்னை நம்பி வருபவர்களுக்கு எந்தப் பிரச்சினை வந்தாலும் என் வீடே அலுவலகமாகச் செயல்பட்டு, அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து பாதுகாப்பேன். என்றைக்குத் திருப்பூர் என்ற அடையாளம் அழிக்கப்படுகிறதோ... 50 ஆண்டு காலம் 'திருப்பூர்னா செல்வராஜ்தான் திமுக'. தொண்டர்களைப் பாதுகாப்பதில் 'வேட்டியை மடிச்சுக்கட்டி நில்லுங்க செல்வராஜ்' என்று சொன்னவர் நம்முடைய கழகத் தலைவர் தளபதி. இளைஞர்களுக்கு வாய்ப்பு கொடுத்ததில் எனக்குச் சந்தோஷம்தான்; ஆனால் பல்லடத்திலும் ஒரு இளைஞருக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கலாம் அல்லவா? தலைமையில் என்ன மன மாற்றம் ஏற்பட்டாலும் மீண்டும் திமுகவுக்குள் பொறுப்பு கேட்டுப் போக மாட்டேன். ஆனால், திமுகவில் சாதாரண, சரியான நபர்களை உருவாக்கினால், அவர்களுக்காகக் களத்தில் நின்று ஜெயிக்க நான்பாடுபடுவேன். எனது சமூகப் பணி என்றும் தொடரும் எனவும் தெரிவித்தார்..

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித் தொகை பெற விண்ணப்பிக்கலாம் கலெக்டர் அழைப்பு

தஞ்சாவூர் மே 22

தஞ்சாவூர் மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித் தொகை பெற விண்ணப்பிக்கலாம் என தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் அழைப்பு விடுத்துள்ளார்

இது தொடர்பாக அவர் விடுத்து ள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்ப தாவது

வேலைவாய்ப்பற்ற இளைஞர் களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் தமிழக அரசு 2006 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்தச் திட்டத்தின் கீழ் பயன் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து முறையாக புதுப்பித் திருக்க வேண்டும் .

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன் பாக பதிவு செய்து, 5 ஆண்டுகள் பூர்த்தியாகி இருக்க வேண்டும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர் களுக்கு மாதம் ரூபாய் 200 ம் , தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூபாய்300ம்,மேல்நிலைக்கல்விதேர்ச்சிபெற்றவர்களுக்கு ரூபாய் 400 ம் பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களு க்கு ரூபாய் 600 ம் வழங்கப்பட்டு வருகிறது

உதவித்தொகை பெற பொது பிரிவினராக இருந்தால் 40 வயதிற்குள்ளும், ஆதிதிராவிடர் கள் மற்றும் பழங்குடியினராக இருந்தால் 45 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும். விண்ணப்பதா ரரின் குடும்ப வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 72,000 மிகாமலு ம் இருக்க வேண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கு மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்ற வர்களுக்கு மாதம் ரூபாய் 750 ம் பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களு க்கு மாதம் ரூபாய்1,000ம் உதவித் தொகையாக 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது .2025 ஆம் ஆண் டு ஏப்ரல் 30ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாக பதிவு செய்து ஓராண்டு பூர்த்தி ஆகி இருக்க வேண்டும்

உதவித்தொகை பெறும் காலத் தில் எந்த ஒரு கல்வி நிறுவனங்க ளிலும் முழு நேரமாக மாணவராக இருக்கக் கூடாது .தொலைதூரக் கல்வி பயில் பவராக இருக்கலாம், அரசு துறை, தனியார் துறையில் ஊதியம் பெறும் எந்த பதிவிலோ அல்லது சுய வேலை வாய்ப்பிலோ ஈடுபடுவதாக இருக்கக்கூடாது. முற்றிலும் வேலையில்லாதவராக இருக்க வேண்டும். எந்த ஒரு அரசு திட்டத்திலும் உதவித்தொகை பெறுபவராக இருக்கக் கூடாது.

தகுதிஉடையவர்கள்இதற்கானவிண்ணப்பபடிவத்தை அலுவலகத் தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம் இல்லையென்றால் https://tnvelaiaaippu. gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்ப படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்து அனைத்து கல்வி சான்றி தழ்கள், ஆதார் அட்டை நகல் மற்றும் குடும்ப அட்டை நகலுடன் இந்த மாதத்திற்குள் (மே )அலுவலக வேலை நாட்களில் தஞ்சாவூர் மணி மண்டபம் எதிரே அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழிலில் நெறி வழிகாட் டு மையத்தில் நேரில் அளிக்க வேண்டும் .மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# ஆன்லைன் மருந்து விற்பனைக்கு எதிர்ப்பு மருந்து: வணிகர்கள் கடையடைப்பு போராட்டம்



தஞ்சாவூர் மே 22

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆன்லைன் விற்பனை க்கு நிறுத்த கோரி மருந்து வணிகர்கள் கடையடைக்கப் பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆன்லைன் மருந்து விற்பனை க்கு தடை கூறி வேலை நிறுத்தத் திற்கு அகில இந்திய மருந்தக உரிமையாளர்கள் மற்றும் விற்ப னையாளர் சங்கம் அழைப்பு விடுத்தது. இந்த அழைப்பை ஏற்று தஞ்சாவூர் ரெயில் , பழைய கோர்ட்டு சாலை, ராமநாதன் ரவுண்டானா, தெற்கு வீதி, தெற்கு அலங்கம் உள்பட மாவட்ட முழுவ தும் மருந்தகங்கள் அடைக்கப்பட்டு இருந்தன.

சுமார் 3000 மருந்தகங்கள் மாவ ட்டம் முழுவதும் அடைக்கப்பட்டிருந் தன .இந்த மருந்தகங்கள் அனைத்தும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அடைக்கப்பட்டு, மருந்து விற்பனை நிறுத்தப்பட்டது.

வேலைநிறுத்தத்தில்ஆன்லைன்மருந்துவிற்பனையை தடுத்து நிறுத்த வேண்டும் ,வலி நிவாரணி மற்றும் தூக்க மாத்திரைகளை ஆன்லைன் மூலம் வாங்கி அடிமையாகவும், இளம் தலைமுறை காக்க வேண்டும். உயிர் காக்கும் மருந்து விற்பனையில் முறையற்ற லாப சதவீதங்கள், அதிக தள்ளுபடிகளை யும் கட்டுப்படுத்த வேண்டும். போலி மருந்து விற்பனையை தடுக்க வேண்டும்

ஆன்லைன் மூலம் வாங்கப்படும், கருக்கலைப்பு மருந்துகளால் ஏற்ப டும், உயிரிழப்புகள் மற்றும் கலாச்சார சீரழிவை தடுத்து நிறுத்த வேண்டும், முகம் தெரியாத ஆன்லைன் விற்பனையாளரால் மத்திய மாநில அரசுகளுக்கு ஏற்படும் வரி இழப்பை தடுத்திட வேண்டும், மத்திய அரசு மருந்து விற்பனைக்கு விதித்துள்ள விதி களை தளர்த்த வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மருந்தகங்கள் அடைப்பினால் மாத்திரைகள் வாங்க முடியாமல்பொதுமக்கள்பாதிக்கப்பட்டனர்.இருந்தாலும் மருத்துவமனைகள், கிளினிக்குகளில் செயல்படும் மருந்தகங்கள்வழக்கம்போல்செயல்பட்டன.அதேபோல பிரதம மந்திரி மருந்துகளும், பெரும் பாலும் செயல்பட்டனர். தமிழக அரசு சார்பில் மானிய விலையில் தரமான மருந்துகள் வழங்க கூட்டுறவு துறையின் கீழ் செயல் படும் முதல்வர் மருந்தக ங்கள் வழக்கம் போல் செயல்பட்டன. இதனால் பாதிப்புகள் பெரும் பாலும் குறைக்கப்பட்டது

இந்த ஒரு நாள் போராட்டத்தால் தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் ரூபாய் 3 கோடி மதிப்பிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக தஞ்சாவூர் மாவட்ட மருந்து வணிகர் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.



# பேச்சிப்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு

நாகர்கோவில், மே.22

திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட பேச்சிப்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் குற்றியாறு பழங்குடியினர் நடமாடும் மருத்துவ அலகினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர். அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது:

பேச்சிப்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை ஆய்வு மேற்கொண்டு, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது. மேலும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த நோயாளிகளிடம் வழங்கப்படும் சிகிச்சைகள் முறையாக வழங்கப்படுகிறதா எனவும், அதனைத்தொடர்ந்து ஆய்வகத்தை பார்வையிட்டு, நோயாளிகளுக்கு பரிசோதனை முடிவுகள் காலதாமதமின்றி வழங்கப்படுகிறதா எனவும், மேலும், பாம்பு கடி எதிர் விஷ மருந்து, நாய் கடி தடுப்பூசி மற்றும் இம்யூனோகுளோபுலின் மருந்துகள் வழங்கப்படுகிறதா எனவும், அவற்றின் இருப்பு குறித்தும், இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கு இரும்புச் சுக்குரோஸ் ஊசி வழங்கப்பட்டு அவர்களின் உடல்நிலை கண்காணிக்கப்படுகிறதா எனவும் மருத்துவரிடம் கேட்டறியப்பட்டது. மேலும் பேச்சிப்பாறை அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வட்டார மருத்துவ அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது. பேச்சிப்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்று வரும் வர்ணப்பூச்சு பணிகளை பொதுப்பணித்துறையினர் விரைவாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து குற்றியார் பகுதியில் செயல்பட்டு வரும் பழங்குடியினர் நடமாடும் மருத்துவ அலகு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு மருத்துவக் குழுவினரால் வழங்கப்பட்டு வரும் சுகாதார சேவைகள் குறித்து கேட்டறியப்பட்டது. என கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நமச்சிவாயம், குட்டக்குழி வட்டார மருத்துவ அலுவலர் மரு.அருண் சந்தோஷ், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



## கடையால், பொன்மனை பேரூராட்சிகளில்

# பழங்குடியின பயனாளிகளுக்கு வீடுகள்; கலெக்டர் ஆய்வு

நாகர்கோவில், மே.22

குமரி மாவட்ட தாட்கோ திட்டம் மூலம் பொன்மனை பேரூராட்சிக்குட்பட்ட காயல் கரை மற்றும் கீரிப்பாறை மலைவாழ் பழங்குடியின பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, நேரில் ஆய்வுமேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

தமிழ்நாடு அரசு தாட்கோ வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு தொல்குடி திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என அறிவித்தது. அதன் ஒருபகுதியாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் தொல்குடி திட்டத்தின்கீழ் கடையால் பேரூராட்சிக்குட்பட்ட புரையிடம் பகுதியில் 7 வீடுகளும், பெருங்குருவி பகுதியில் 4 வீடுகளும், செறுகிடத்துக்காணி பகுதியில் 11 வீடுகள் மற்றும் பொன்மனை பேரூராட்சிக்குட்பட்ட கீரப்பாறை மலை பகுதியில் 15 வீடுகளும், காயல்கரைமலை பகுதியில் 12 வீடுகளும், அம்புடிஞ்சான்மலை பகுதியில் 5 வீடுகளும், வெக்காலிமூடுமலை பகுதியில் 24 வீடுகளும், மூக்கரைக்கல் பகுதியில் 22 வீடுகள் என மொத்தம் 100 பழங்குடியினர் பயனாளிகளுக்கு கட்டப்படவுள்ளன. தலா ரூ.5 லட்சத்து 73 ஆயிரம் வீதம் ரூ.5 கோடியே 73 லட்சம் / மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்து, வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில் பொன்மனை பேரூராட்சிக்குட்பட்ட காயல் கரை மற்றும் கீரிப்பாறைமலை பகுதிகளில், பழங்குடியின மக்களுக்காக தாட்கோ நிறுவனம் மூலம் கட்டப்பட்டு வரும் வீடுகளின் அஸ்திவார பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், கட்டுமானப் பணிகளின் தரம் மற்றும் தற்போதைய நிலை குறித்து துறை அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டதோடு, நடைபெற்றுவரும் பணிகளை எவ்வித தொய்வுமின்றி, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் விரைந்து முடித்து பழங்குடியின மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான குடிநீர், மின்சாரம் மற்றும் சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். உடன் அதிகாரிகள் பங்கேற்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.